sns academy

an International CBSE Finger Print School
Coimbatore

# கட்டுரை.

## எங்கள் பள்ளி.

**முன்னுரை:**

நான் எஸ்.என்.எஸ் அகாடமி பள்ளியில் படிக்கின்றேன். எங்கள் பள்ளியின் சிறப்பு பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தோற்றம்:**

எங்கள் எஸ்.என்.எஸ் அகாடமி பள்ளி கோவை மாநகரில் 2014 ஆம் ஆண்டு தனது கல்விச் சேவையைத் துவங்கியது. பெற்றோரின் பேராதரவுடனும், மாணவர்களின் ஒத்துழைப்புடனும் தனது கல்விச் சேவையைத் தொடர்ந்து வருகிறது.

**பள்ளியின் நோக்கம்:**

உலகில் தலைச்சிறந்த தொழில் முனைவோராகவும் கல்வி, பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றில் தலைச்சிறந்தவராகவும் மாணவர்களை உருவாக்குவதே எங்கள் பள்ளியின் நோக்கமாகும்.

**மாணவர் நலன்:**

எங்கள் பள்ளியில் , மாணவர்களின் உடல்நலம் மற்றும் மனநலனைக் காக்க, ஆழ்நிலை தியானம் மற்றும் மூச்சுப்பயிற்சியும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது.

**ஆய்வுக்கூடங்கள்:**

நவீன முறை அறிவியல் சோதனைக்கூடம், கணினிக்கூடம் ஆகியன மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

**நூலகம்:**

மாணவர்களின் அறிவுத்திறனை மேன்மேலும் வளர்க்க, சுமார் 5,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை:**

ஆசிரியர்களும் நாங்களும் நண்பர்கள் போல் கலகலப்புடன் கலந்துரையாடுவதால், எங்கள் பள்ளியில் எளிமையாகப் பாடங்களைக் கற்கிறோம்.